ஆட்பரித்து எழுந்த அலை பாட்டிசைத்தது
எம்மை தாக்கி வந்த கடற்படையின் படகெரிந்தது
நேற்றுவரை அழுத கடல் இன்றெழுந்தது
எம்மை வட்டி நின்ற கடற்கலத்தின் கதை முடிந்தது 2

அலைகடலில் தினமெதிரி வந்து வந்து போவான்
எங்கள் அன்னை மண்ணை வந்தெரித்து கொன்றுவிட்டு போவான்
நட்ட நடு ராத்திரியில் புயல் புகுந்தது
எதிரி நின்ற இடம் தெரியாமல் வெடி அதிர்ந்தது 2

ஆட்பரித்து எழுந்த அலை பாட்டிசைத்தது
எம்மை தாக்கி வந்த கடற்படையின் படகெரிந்தது

எங்களது வான் பரப்பில் புகை எழுந்தது
அந்த புகை நடுவே கரும்புலியின் முகம் தெரிந்தது 2
போரெடுத்து வந்த பகை இன்று அழுதது
எங்கள் பெண்புலியாம் கரும்புலியின் பேர் எழுந்தது 2

ஆட்பரித்து எழுந்த அலை பாட்டிசைத்தது
எம்மை தாக்கி வந்த கடற்படையின் படகெரிந்தது

புலிமகள் அங்கையர்கன்னி போர்முகத்தில் போறாள்
அந்த துறைமுகத்தில் நின்ற கப்பல் சிதறடித்து போனாள் 2
கண்ணெதிரே நின்ற முகம் காவியமாய் ஆச்சு
அந்த கரும்புலியின் பொன்னுடலை தீஎரிச்சு போச்சு 2

ஆட்பரித்து எழுந்த அலை பாட்டிசைத்தது
எம்மை தாக்கி வந்த கடற்படையின் படகெரிந்தது
நேற்றுவரை அழுத கடல் இன்றெழுந்தது
எம்மை வட்டி நின்ற கடற்கலத்தின் கதை முடிந்தது

ஆட்பரித்து எழுந்த அலை பாட்டிசைத்தது
எம்மை தாக்கி வந்த கடற்படையின் படகெரிந்தது